# பர்ஸானா ஸ்ரீ ராதாராணி புராதன மந்திர் திருப்பணி கைங்கர்யம் மற்றும் நூதனமாக வெள்ளியில் அமைக்கப்பட்ட அஷ்ட ஸகி மூர்த்திகள் பிரதிஷ்டை...

**பகவான் ஸ்ரீ க்ருஷ்ணர், உத்தரப்பிரதேசம் மதுராவில் அவதாரம் செய்தது போல, பர்ஸானாவில் உள்ள பிரம்மஞ்சல் பர்வதம் என்ற மலையில் (விருந்தாவனத்தில் இருந்து 50km தூரத்தில் உள்ளது) ஸ்ரீ ராதாராணி அவதாரம் செய்தார். இந்த மலை ஸ்ரீ ராதாராணியின் இருப்பிடமாக /வாசஸ்தலமாக பக்தர்களால் கொண்டாடப்படுகின்றது. ஸ்ரீ ராதாராணிக்கு என்றே இங்கு பிரத்யேகமாக ஒரு மந்திர் உள்ளது. இங்கு இன்று நாம் ஸ்ரீ ராதாராணியை தரிசனம் செய்யும் மந்திர் சுமார் 200 வருடங்களுக்கு முன் நிர்மாணம் செய்யப்பட்டது. அதற்கு முன்பு ஸ்ரீ ராதாராணி வாசம் செய்த புராதனமான மந்திர் சுமார் 650 வருடங்களுக்கு முன்பு அமைக்கப்பட்டது. இந்த புராதனமான மந்திர் போதிய இடவசதி இல்லாத சூழலாலும் மேலும் காலதேசவர்த்தமானத்தாலும் மிகவும் பழுதடைந்து இருந்ததால் அதற்கு அருகே சுமார் 200 வருடங்களுக்கு முன்பு இன்று நாம் காணும் மந்திர் புதிதாக நிர்மாணம் செய்யப்பட்டு அதில் ஸ்ரீ ராதாராணி எழுந்தருளி நமக்கு திவ்ய காட்சி தருகிறார். ஸ்ரீ ராதாராணியின் புராதன மந்திர் 200 வருடங்களில் மேலும் பழுதடைந்து உபயோகமற்ற நிலையில் இருந்து வந்தது.**

**இந்நிலையில் கடந்த 2022 நவம்பர் மாதம் நம் குருநாதர் பர்ஸானா ஸ்ரீ ராதாராணி சன்னதியில் சத்சங்கம் நடத்திய சமயத்தில் தனது புராதன மந்திர் கட்டிடத்தை திருப்பணி செய்து அதை தனது மந்திரின் பெரிய சமையலறை (மடப்பள்ளி) மற்றும் சாதுக்கள் உணவருந்தும் (சாது போஜனம்) செய்யும் பெரிய ஹால் என்று உபயோகமாக அமைக்க வேண்டும் என்று ஸ்ரீ ராதாராணியின் உத்தரவு குருநாதரால் கிடைக்கப்பெற்றது. அதேசமயம் ஸ்ரீ ராதாராணி மேலும் ஒரு**

**உத்தரவாக தனது சன்னதியில் தனக்கும், பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்கும் மிகவும் பிடித்த தனது தோழிகள் 8 பேருக்கும் (அஷ்ட ஸகிகள்) புதியதாக கோயிலில் ஏற்கனவே இருக்கும் வழக்கப்படி வெள்ளியில் புதிதாக மூர்த்திகள் செய்து ப்ரதிஷ்டை செய்ய வேண்டும் என்று கிடைத்தது.**

**தற்பொழுது ஸ்ரீ ராதாராணி புராதன மந்திர் புணருத்தாரன பணிகள் நம் குருநாதரின் ஏற்பாட்டில் தாராள உள்ளம் கொண்ட சிங்கப்பூர் ஸ்ரீ ஜகந்நாதன் ராம்குமார் - வித்யா ஜகன் தம்பதியினர் மற்றும் தாம்பரம் மயூர் டிம்பர்ஸ் ஸ்ரீ J நாராயணனின் பொருளுதவியுடன் நடைபெற்று வருகின்றன.**

**அதே போல வெள்ளியில் அஷ்ட ஸகிகள் முர்த்திகளும் புதிதாக தயார் செய்யப்பட்டு இப்பணி பூர்த்தி அடையும் தருவாயில் உள்ளது... விரைவில் இந்த அஷ்ட ஸகி மூர்த்திகள் பர்ஸானாவிற்கு எழுந்தருளயிருக்கின்றார்கள்.**

# Renovation Kainkaryam of the Shri Radharani's Ancient Temple at Barsana and Prathishta of New Silver Ashtasakhi Murthis

Just like Bhagavan Sri Krishna's avatara took place in Mathura, Uttar Pradesh, Shri Radharani's descent took place in Barsana on the Brahmanchal Parvat mountain (located 50 km from Vrindavan). This mountain is celebrated by devotees as the abode (vAsasthal) of Shri Radharani. There is a temple here specifically dedicated to Shri Radharani. The temple where we have darshan of Shri Radharani today, was built about 200 years ago. The ancient temple that Shri Radharani lived in before that was established 650 years earlier. As the ancient temple was in a dilapidated state due to weathering over time, and also because of lack of adequate space, the newer temple that we see today was constructed nearby about 200 years ago. Shri Radharani now resides in this temple and blesses us with Her divine darshan.

Over the past 200 years, the original ancient temple of Shri Radharani became even more dilapidated and was in ruins. In November 2022, when our Guru Maharaj conducted satsang in Shri Radharani's sannidhi in Barsana, he received divine instruction from Shri Radharani to renovate Her ancient temple building and convert it into a large temple kitchen (maDapaLLi) and a hall for feeding sadhus (sadhu bhojanam).

At the same time, Shri Radharani also instructed that the Ashtasakhis (8 sakhis), who are very dear to Her as well as Bhagavan Sri Krishna, should also be newly installed in Her temple, in the form of new silver murthis following the tradition already being followed at the temple.

Currently, under the guidance of our Guru Maharaj, and through the financial service of Sri Jagannathan Ramkumar and Smt Vidya Jagannathan, Singapore, and Sri. J Narayanan, Mayuram Timber, Tambaram, the renovation work of the ancient temple of Shri Radharani is being conducted successfully. The silver Ashtasakhi murthis are also ready and this kainkaryam is also in the completion stage. Very soon, these Ashtasakhi murthis shall be installed in Barsana.